Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 135 | செவ்வாய்க்கிழமை Tuesday | 17.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# வெற்றி வாய்ப்பை இழந்த தொகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்

## மாவட்டச் செயலாளர்களுக்கு மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்



சென்னை: தேர்தல் பிரச்சாரத்தின் போது தனிநபர் விமர்சனத்தை தவிர்க்க வேண்டும் என திமுகவினரை அக்கட்சியின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள சூழலில், அனைத்து அரசியல் கட்சிகளும் பிரச்சாரத்திற்கான பணிகளை முடுக்கிவிட்டுள்ளன. அந்த வகையில், ஆளும் கட்சியான திமுக பிரச்சாரம், கூட்டணி கட்சிகளுக்கு தொகுதிகள் ஒதுக்கீடு உள்ளிட்ட பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில், திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில், பொதுச் செயலாளர் துரைமுருகன் முன்னிலையில் அக்கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று நடைபெற்றது. இதில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என். நேரு, துணை பொதுச்செயலாளர்கள் கனிமொழி, பொன்முடி, ஆ. ராசா, ஐ.பெரியசாமி, திருச்சி சிவா, அந்தியூர் செல்வராஜ், அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும்தமிழ்நாடு முழுவதும் இருந்து 77 மாவட்டச் செயலாளர்கள் பங்கேற்றனர். இந்த கூட்டம் 10.30 மணிக்கு தொடங்கி 12.45 வரை நிறைவடைந்தது.

2026 பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான நிலையில், தேர்தல் வியூகங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. மாவட்டரீதியான புள்ளி விவரங்களுடன் தகவல்களை தெரிவித்த மு.க.ஸ்டாலின், பல்வேறு அறிவுறுத்தல்களையும் மாவட்டச்செயலாளர்களுக்கு வழங்கினார்.

கூட்டணிக் கட்சிகளுடன் ஒத்துழைத்து பணியாற்றுவதோடு, 2021 ஆம் ஆண்டு தேர்தலில் குறைவான வாக்குகள் பெற்ற இடங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், தேர்தல் பிரச்சாரத்தின் போது தனிநபர் விமர்சனத்தை தவிர்க்க வேண்டும். திமுகவின் ஐந்து ஆண்டு சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு செல்லவேண்டும்.கடந்த தேர்தல்களில் வாக்குகள் குறைவாக பெற்ற வாக்குச்சாவடிகளில், வெற்றிவாய்ப்பை இழந்த தொகுதிகளில் கூடுதல் கவனம்செலுத்தவேண்டும் என்று மு.க.ஸ்டாலின் மாவட்டச் செயலாளர்களுக்கு உத்தரவிட்டார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய திமுக தலைமை செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன், "கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் குறைவான வாக்குகள் பெற்ற இடங்களில் கூடுதல் கவனம் செலுத்தி பணியாற்ற முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். மேலும், SIR பணிகளில் விடுபட்டவர்களைமீண்டும் சேர்ப்பதற்கான பணிகளைமேற்கொள்ள வேண்டும். கூட்டணிக் கட்சிகளுடன் ஒத்துழைத்து பணியாற்ற வேண்டும். மாவட்டரீதியாக தற்போதைய நிலை குறித்த கருத்துகளையும் முதலமைச்சர் கேட்டறிந்தார்" என்று கூறினார்.

மேலும், "தவெக பாஜக உடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என தவெக்தான் மறுக்கிறது. ஆனால், பாஜக மறுத்துள்ளதா? பாஜக தான் தவெகவுடன் பேசி வருகிறார்கள். அதை பாஜக தரப்பில் மறுப்பார்களா?" என்று கேள்வியெழுப்பினார். உடல்நல குறைபாடு காரணமாக ஓய்விலிருந்த திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் கூட்டத்தில் பங்கேற்க வந்த போது, உடல்நலம் குறித்து செய்தியாளர்கள் கேட்ட போது, "வந்துட்டேன்யா வந்துட்டேன்" என்று பதிலளித்தார். கூட்டம் முடிந்த பிறகு செய்தியாளர்களிடம் துரைமுருகன், "உடல்நிலை சரியில்லாத காரணமாக ஓய்வில் இருந்தேன். இப்போது கட்சிப் பணியைத் தொடங்கிவிட்டேன். திமுகவிற்கு வெற்றி வாய்ப்பு Bright ஆக உள்ளது" என்றார்.

# உரிய ஆவணங்களுடன் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம்; தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்




சென்னை: தமிழகத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 20 மணி நேரத்திற்குள் 1.26 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் மற்றும் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டதாக தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் சட்டப் பேரவை தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்,தலைமைசெயலகத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர், "தமிழக சட்டப் பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வரும் 30 ஆம் தேதி தொடங்கி, ஏப்ரல் 6 ஆம் தேதி நிறைவு பெறுகிறது. இருந்தாலும் மார்ச் 31, ஏப்ரல் 3, 4, 5 பொது விடுமுறை நாட்கள் தவிர மற்ற நாட்களில் வேட்புமனு தாக்கல் செய்யலாம்.

தொடர்ந்து, வேட்புமனு பரிசீலனை ஏப்ரல் 7 ஆம் தேதியும், வேட்பு மனுக்களை ஏப்ரல் 9 ஆம் தேதியும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அதனையடுத்து வாக்குப்பதிவு ஏப்ரல் 23 ஆம் தேதியும், வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் தேதியும் நடைபெறுகிறது.தேர்தல் நடத்தை விதிமுறைகள் மே 6 ஆம் தேதியுடன் நிறைவடையும்" என தெரிவித்தார்.

மேலும், "மார்ச் 15 நிலவரப்படி, தமிழ்நாட்டில் 5.69 கோடி வாக்காளர்கள் உள்ளனர். ஒட்டு மொத்தமாக 2,106 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்று (மார்ச் 15) முதல் தேர்தல் நடத்தைவிதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன. வாக்கு சாவடி மையங்களில் அனைத்து வசதிகளையும் மேற்கொள்ள தேர்தல் அதிகாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடிக்கு வெளியே வாக்காளர்கள் கைபேசியை பாதுகாக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்" என்றார்.


தொடர்ந்து பணம் பறிமுதல் குறித்து பேசிய தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனாபட்நாயக், "உரிய ஆவணங்களுடன் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம். ஆவணங்கள் இருந்தால் சோதனைக்குப் பிறகு அந்த பணம் அப்போதேதிருப்பி ஒப்படைக்கப்படும்.

சோதனைகளின் போது பொதுமக்களை தொந்தரவு செய்யக் கூடாது என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளும் கண்காணிக்கப்படும்" என்றார்.

தேர்தல் தொடர்பாக தொடர்ந்து பேசிய அவர், "வரும் 26 ஆம் தேதி வரை புதிய வாக்காளர் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். புதிதாக வாக்காளர் அடையாள அட்டை கேட்டு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு ஆவணங்கள் சரியாக இருந்தால் விரைவில் வாக்காளர் அட்டை கிடைக்கும்" என்று கூறினார்.

அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் குறித்த கேள்விக்கு பதில் அளித்த தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், "பிரச்சாரத்திற்காக ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். தேர்தல் பிரச்சாரம் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மேற்கொள்ளலாம். 5 ஆயிரம் பேருக்கு மேல் கூடினால் அடிப்படை வசதிகள் இருக்கிறதா? என்பதை பார்ப்போம்" என்றார்.

# துபாய் விமான நிலையம் அருகே ட்ரோன் தாக்குதல் விமானப் போக்குவரத்து நிறுத்தம்



துபாய்: துபாய் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் இன்று (திங்கள்கிழமை) அதிகாலை நடந்த ட்ரோன் தாக்குதலில் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. இதன் காரணமாக, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

துபாயில் அமைந்துள்ள உலகின் மிகவும் பரபரப்பான சர்வதேச விமான நிலையத்தின் அருகே நடந்த இச்சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் துபாய் அதிகாரிகள் தெரிவித்தனர். தீயை அணைக்கதுபாய்அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.இதுகுறித்துதுபாய் ஊடக அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், "துபாய் சர்வதேச விமானநிலையத்திற்கு (DXB) அருகே நடந்த ட்ரோன் தாக்குதலில் எரிபொருள் தொட்டிகளில் ஒன்று பாதிக்கப்பட்டது. தீயை கட்டுக்குள் கொண்டுவர துபாய் பாதுகாப்பு படைகள் தற்போது தீவிரமாக பணியாற்றி வருகின்றன. இச்சம்பவத்தில் இதுவரை யாருக்கும் காயம் ஏற்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துபாய் விமான நிலைய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதால், ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸில் துபாய்க்கு செல்லும் மற்றும் அங்கிருந்து புறப்படும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. துபாய் விமானநிலையத்திற்கு அருகில் தாக்குதல் நடந்தசிலமணிநேரங்களுக்குப் பிறகு,நகரத்தின் சில பகுதிகளில் வான் பாதுகாப்பு எச்சரிக்கைகள் ஒலித்தன. ஈரானில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை தங்கள் வான் பாதுகாப்பு அமைப்புகள் இடைமறித்து அழித்ததாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகள் அறிவித்தனர். ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள மூன்று முக்கிய துறைமுகங்களைகாலி செய்ய ஈரான் நேற்று அழைப்பு விடுத்த நிலையில்,இன்று இந்த தாக்குதல் நடந்துள்ளது. ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியை கையாளும் முக்கிய முனையமான கார்க் தீவில் சமீபத்தில் தாக்குதல்களை நடத்த ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ளதுறைமுகங்கள், கப்பல் தளங்கள் மற்றும் மறைவிடங்களைப் பயன்படுத்துவதாக அமெரிக்கா மீது ஈரான் குற்றம் சாட்டியது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# மானாமதுரை ஸ்ரீ பூமி நீளா ஸமேத ஸ்ரீதியாக விநோத பெருமாள் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம்



சிவகங்கை மாவட்டம் இந்து சமய அறநிலைத்-திற்குட்பட்ட மானாமது-ரையில் அமைந்துள்ள ஸ்ரீ பூமி நீளா ஸமேத ஶ்ரீதியாக விநோத பெருமாள் திருக்கோவிலில் விசு-வாவசு வருடம் பங்குனி மாதம் 2-ஆம் (மார்ச் 16) தேதி திங்கட்கிழமை காலை விஸ்வரூபம் புண்யாகவசனம் திரு-வாராதனம் ஹோமங்-கள் பாராயனம் சாந்தி-ஹோமம் பூர்ணாஹூதி தசதானம் யாத்ரா-தானம் கும்பம் எழுந்தருளலலை தொடர்ந்து, 9 மணி முதல் 10.30 மணிக்-குள் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கடந்த 13ஆம் தேதி மங்கல இசை,பகவத் அனுக்ஞை, விஸ்-வக்ஸேனர் ஆராத-னம், புண்யாக வச-னம் வாஸ்து சாந்தி, ம்ருத்ஸங்க்ரஹ-ணம், திருவாராதனம் சாற்று முறை நடை-பெற்றது. அதனைத் தொடர்ந்து 14 ஆம் தேதி புண்யாகவசனம், சுதர்-சன ஹோமம், மானோன்மான, சாந்தி ஹோமம், யந்த்ரஸ்தாப-னம், மருந்து சாத்துதல், பூர்ணாஹூதி சாற்று முறை மற்றும் ஸ்நிதி திருவாரதனம் ரக்ஷாபந்-தனம் கலாகர்ஷனம் யாகசாலை பிரவேசம் த்வார தோரண த்வஜ கும்ப ஆராதனம், சக்-ராப்ஜ மண்டல ஆராத-னம் திவ்ய ப்ரபந்த பாரா-யணம் ஹோமங்கள் பூர்ணாஹுதி திருவாரா தனம் சாற்று முறையும் நடைபெற்றது.

இதில் சிவகங்கை மாவட்ட இந்து சமய அறநிலையத்துறையின் இணை ஆணையாளர் பாரதி,துணைஆணைய-ளர் கவிதா, ஆய்வாளர் அய்யனார் ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை அறங்காவலர் குழுவின் புவனேஸ்வரி இளங்-கோவன், ஏ. ஆர். ஜெய-மூர்த்தி வெள்ளையன், கௌரிகார்த்திகேயன், செல்வராஜ், மானாம-துரை ஸ்ரீ தியாக விநோத பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் கார்த்திக்,ராம-லட்சுமிகணேசன்,சதீஷ்-குமார் ஆகியோர் முன்-னிலை வகித்தனர்.

மேலும் இந்நிகழ்வில் அர்ச்சகர்ஸ்ரீனிவாசபட்-டர், லட்சுமி நாராயண பட்டாச்சாரி, ஸ்தபதி சண்முகம், திருப்பணி கமிட்டியாளர்கள், மானாமதுரை மற்றும் அதன் சுற்றுவட்டார பகு-தியில் உள்ள பக்தகோடி பெருமக்கள் பெரும் திர-ளாக கலந்து கொண்ட-னர்.



தேனிமாவட்டம் தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் மலபார் கோல்ட் தங்கம் வைரம் பிளாட்டினம் வெள்ளி என தனி தனி பிரத்தியோகா ஷோரும் புதிய கிளை திறப்பு விழா திரைப்பட நடிகர் ஜெயம் ரவி திறந்து வைத்தார் உடன் மலபார் கோல்ட் தமிழ்நாடு தலைவர் யாசர், நிறுவனத்தில் டைமண்ட் தலைவர் சுதிர் அகமது. தமிழ்நாடு வடக்கு மண்டல தலைவர் நௌசாத். மலபார் கோல்ட் டைமண்ட் தேனி கிளையின் துணைத்தலைவர் (ம) மலபார் கோல்ட் டைமண்ட் வேளாண்மை உறுப்பினர் கிளை ஊழியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் முதல் விற்பனையை தேனி வைகை ஸ்கேன் உரிமையாளரும் திமுக பிரமுகர் மருத்துவர் T.பாண்டியராஜன் பெற்றுக் கொண்டார் மலபார் கோல்ட் நிறுவனம் தற்போது 14 நாடுகளில் 425க்குமேற்பட்டசில்லறைவிற்பனைநிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது தமிழ்நாட்டில் சென்னை கோவை மதுரை நாகர்கோவில் திருநெல்வேலி சேலம் ஈரோடுதஞ்சாவூர்ராமநாதபுரம்தர்மபுரிவேலூர்திருச்சிகும்பகோணம்காரைக்குடி மயிலாடுதுறை புதுக்கோட்டை மார்த்தாண்டம் புதுச்சேரி கரூர் செங்கல்பட்டு கடலூர் ஓசூர் கள்ளக்குறிச்சி தேனி ஆகிய தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் 36 கிளைகளை கொண்டுள்ளது மலபார் கோல்டு டைமண்ட் வைர வெள்ளி நகை கடைகள் கிராமப்புற மக்களின் நகரப்புற மக்களையும் ஒன்றிணைத்து ஒரு சேவை நிறுவனமாக பல ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது மக்களின் நம்பிக்கைக் உரிய நிறுவனமாகும் தமிழ்நாட்டில் 36 கிளைகளைக் கொண்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.



வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக முதல் தளத்தில் தேர்தல் கட்டுப்பாட்டு அறையினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அன்று (15.03.2026) திறந்து வைத்து, பார்வையிட்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு சட்டமன்றபொதுத்தேர்தல் வருகின்ற (23.04.2026) அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (16.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் அரசு அலுவலர்களுக்கான தேர்தல் நடத்தை நெறிமுறைகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் , கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் எஸ்.சிவானந்தம் , உதவி ஆட்சியர் (பயிற்சி),காஞ்சன்சௌத்ரி , திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப. கந்தராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது)தேன்மொழி, (வளர்ச்சி) ரமேஷ்கிருஷ்ணன், (தேர்தல்) மகேஸ்வரி, இணை இயக்குநர் (வேளாண்மை) சிவக்குமார், வட்டாட்சியர் (தேர்தல்) சண்முகசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை சேலம் புறவழி சாலை ரவுண்டானா பகுதியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டனர் அப்பொழுது கள்ளக்குறிச்சி மார்க்கத்திலிருந்து சென்னை நோக்கி சென்ற ஒரு காரை நிறுத்தி சோதனை செய்ததில் அந்த காரில் உரிய ஆவணம் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட ஒரு லட்சம் ரூபாய் ரொக்க பணத்தை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர் அப்பொழுது காரில் வந்த கோயம்புத்தூர் சாய்பாபா காலனியைச் சேர்ந்த வினோ ஜோன் என்பவர் தனது தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வரும் தொழிலாளி ஒருவர் உடல் நல குறைவு காரணமாக சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவருக்காக மருத்துவமனையில் மருத்துவ செலவுக்கு பணம் செலுத்த இந்த பணத்தை எடுத்துச் செல்லப்பட்டதாக கூறிய நிலையில் அதற்கான ஆவணங்கள் இல்லாததால் அந்த பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.





மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் (15032026) அன்று ஈரோடு மாநகர் சூரம்பட்டி பகுதியில் ஈரோடு தெற்கு மாவட்ட திமுக கழக செயலாளர்,அமைச்சர் சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி சூரம்பட்டி பகுதி திமுகழக செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசன் தலைமையில், சூரம்பட்டி பகுதி தேர்தல் பொறுப்பாளர் T.S.குமாரசாமி முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பகுதி நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக பகுதி, வார்டு, சார்பு அணிகள் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேர்தல் நடத்தை விதிகள் முறைகள் அமலுக்கு வந்துள்ளதால் பறக்கும்படை குழுவினர்களுடன் ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்ட வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திலிருந்து மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (15.03.2026) அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா உட்பட பலர் உள்ளனர்.




சமையல் எரிவாய்வு தட்டுப்பாட்டை தடுக்க தவறிய மத்திய அரசை கண்டித்து சுரண்டையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் திமுக கூட்டணி கட்சிகள் நடத்தியது தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன் தலைமையில் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராணி குமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ் பழனி நாடார், மதிமுக துரைமுருகன், தேமுதிக சேர்மன், எஸ்டிபிஐ கட்சியின் தொகுதி செயலாளர்கள் ஜாகிர் உசேன், செய்யத் அலி பாதுஷா, சுரண்டை நகர செயலாளர் அமல்ராஜ், விடுதலை சிறுத்தை கட்சி பாக்கியராஜ், சுரண்டை நகராட்சி சேர்மன் வள்ளி முருகன், ஏ கே சேர்ம செல்வம், சண்முகவேல், காங்கிரஸ் நகர தலைவர் எஸ் கே டி ஜெயபால், சுரண்டை நகரச் செயலாளர் கணேசன் உள்படசுமார் 300க்கும் மேற்பட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

## போச்சம்பள்ளி அருகே
# நூதன முறையில் ஆன்லைனில் மோசடி செய்த நபரை பிடித்து சைபர் க்ரைம் போலீசாரிடம் ஒப்படைப்பு



பர்கூர் அருகே உள்ள நாகம்பட்டி கிராமத்தை சேர்ந்த கார்த்திக் என்பவர் கிருஷ்ணகிரி சைபர் கிரைம் போலீசாரிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஆன்லைன் மூலம் நூதன முறையில் மோசடி செய்த பாபு என்பவரை பிடித்தனர். பாபு என்பவர் ஓஎல்எக்ஸ் வலைதளத்தில் குறைந்த விலைக்கு செல்:போன் விற்பனை செய்வதாக கூறி விளம்பரம் செய்திருந்தார். விளம்பரத்தைக் கண்ட நபர்கள் பாபுவை தொடர்பு கொண்டு செல்போன் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டு பணத்தை செலுத்த பாபுவிடம்விசாரிக்கும்போது,தன்னிடம்பணபரிவர்த்தன வசதிகள் ஏதும் இல்லை எனக் கூறி, ஜெராக்ஸ் கடை வைத்திருக்கும் கார்த்திக் என்பவரை அணுகி தங்களது வங்கிக் கணக்கிற்கு பண பரிவர்த்தனை மூலம் நண்பர் ஒருவர் பணம் அனுப்புவதாக கூறி சம்மதத்தை பெற்றுக்கொண்டு, செல்போன் வாங்கும் நபரிடம் தொடர்பு கொண்டு ஜெராக்ஸ் கடைக்கு பணத்தை அனுப்ப சொல்லியுள்ளார். அதன் அடிப்படையில் அவர் அனுப்பிய பணத்தை ஜெராக்ஸ் கடைக்காரரிடம் இருந்து பெற்றுக் கொண்டு வந்த பாபு ஓஎல்எக்ஸ் -ல் தெரிவித்துள்ளது போல் செல்போனை அனுப்பாமல் ஏமாற்றியுள்ளார். பணத்தைப் பெற்றுக் கொண்டு செல்போன் வராமல் ஏமாந்த வாடிக்கையாளர், ஜெராக்ஸ் கடை மீது சைபர் கிரைமில் புகார் அளித்துள்ளார்.புகாரின்பேரில்சைபர்கிரைம்போலீசார் ஜெராக்ஸ் கடையின் வங்கி கணக்கை முடக்கியுள்ளனர். இதன் அடிப்படையில் ஜெராக்ஸ் கடை நடத்தி வரும் கார்த்திக்கிருஷ்ணகிரி சைபர் கிரைம் போலீசில் சிசிடிவி காட்சிகளை வைத்து கொடுத்த புகாரின் அடிப்படையில், பாபு போச்சம்பள்ளி அருகே தங்கி இருப்பது தெரிய வந்தது. கிருஷ்ணகிரி சைபர் கிரைமின் உத்தரப்பின்படி போச்சம்பள்ளி போலீசார் திருவயலூர் கிராமத்தில் தங்கி இருந்த பாபு என்பவரை பிடித்து சைபர் க்ரைம் போலீஸிடம் ஒப்படைத்தனர். விசாரணையில் செஞ்சி வட்டம் மேல் எடையாலம் அஞ்சல் பொன்பத்தி கிராமத்தை சேர்ந்த முனுசாமி மகன் பாபு (21) என்பது தெரியவந்தது.இவர்தொடர்ந்து ஆன்லைன் மோசடியில் இருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இதே போல் போச்சம்பள்ளியில் இயங்கி வரும் ரெயின்போ ஜெராக்ஸ் கடையில் ரூ.10,000/-மும், போச்சம்பள்ளி அன்னை ஜெராக்ஸ் கடையில் ரூ.6000/- மும் இதே பாணியில் மோசடி செய்துள்ளது தெரியவந்துள்ளது.

# காளிங்கராயன் வாய்க்காலை சீரமைக்க உத்தரவிட்டுள்ளார்கள் அமைச்சர் சு. முத்துசாமி அறிக்கை வெளியீடு

காளிங்கராயன் வாய்க்காலில் 12/3 வது மைல் முதல் 15/4.5 வது மைல் வரை சீரமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 83.3 கோடி நிதி ஒதுக்கி விவசாயிகளின் நன்மை கருதியும், தண்ணீர் வீணாகாமல் விவசாயிகளுக்கு முழு-மையாக பயன்பட வேண்டுமென்ற நோக்-கத்திலும் காளிங்கரா-யன் வாய்க்காலை சீர-மைக்க உத்தரவிட்டு ள்ளார்கள்.

அதில் 13/7-வது மைலில் தொட்டிபாலம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் சிறப்புகள் என்ன-வென்றால் 750 ஆண்டுக-ளுக்கு முன்பு அமைக்-கப்பட்ட தொட்டிபாலம் ஆகும்.

பாலத்தின் மேலே காளிங்கராயன் வாய்க்-கால் தண்ணீர் போகும். அதற்கடியில் பெரும்-பள்ளம் ஓடை செல்கி-றது. அதில் மழைநீரும், கழிவுநீரும் சேர்ந்து ஓடுகிறது.இந்த தொட்டி-பாலம் முழுவதும் மிகப்-பெரும் கருங்கற்களை மட்டுமே பயன்படுத்தி கட்டப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் மிக அதிநுட்பமான ஒரு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, அத்-தொட்டிபாலத் திட்-டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். எனவே, அது மிகப்பெரிய சிறப்புக்குரியது மட்டும் அல்ல, பாதுகாக்கப்பட வேண்டியதும் ஆகும்.

எனவே, இது சம்பந்-தமாக மாவட்ட ஆட்சித்-தலைவர் மற்றும் நீர்வ-ளத்துறை அதிகாரிகள் முன்னிலையில் விவ-சாய சங்கப் பிரதிநிதிகள் மற்றும் காளிங்கராயன் மீது பற்று கொண்ட அமைப்புகளுடன் 11.03.2026 அன்று மாவட்ட ஆட்சியர் அலு-வலகத்தில் கலந்தா-லோசனை கூட்டம் நடைபெற்றது. அனைவ-ரும் அத்தொன்மையான தொட்டிபாலத்தை பாது-காக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்கள்.

பலர் அத்தொட்டிபா-லத்திலேயே நீர் கொண்-டுபோனால் எதிர்காலத்-தில் உடைப்பு ஏற்பட வாய்ப்பிருக்கும். அப்-பொழுது விவசாயிகள் பாதிக்கப்படும் சூழல்



ஏற்படும் என்ற அச்-சத்தை தெரிவித்தனர்.

எனவே, தொட்டிபா-லத்தை அப்படியே எடுத்து பொதுமக்கள் அடிக்கடி வந்து செல்கிற காளிங்கராயன் அணைக்கு அருகில் வைக்கலாம் என்ற கருத்தை தெரிவித்தார்-கள். சிலபேர் அந்த தொட்டிபாலத்தையே பயன்படுத்தலாம் என்-றும் தெரிவித்தார்கள்.

நீர்வளத்துறையின் சார்பில் ஆய்வு செய்த பொழுது அத்தொட்டிபா-லத்தை அப்படியே பயன்-படுத்துவதில் சில சிக்-கல்கள் இருக்கிறது.

எனவே, மாற்று ஏற்-பாடு செய்ய வேண்டு-மென்ற கருத்தை தெரி-வித்தார்கள்.

அதன்பின் மாவட்ட ஆட்சித்தலைவர், நீர்-வளத்துறை அதிகாரி-கள், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஆகியோருடன் என்-னையும் இணைத்துக் கொண்டு 03.02.2026 அன்று அந்த தொட்டி பாலத்தை பார்வை-யிட்டு ஆய்வு செய்-தோம். அதனடிப்படை-யில் தொட்டிபாலத்தை ஒட்டியே ஒரு புதிய பாலம் அமைக்கலாம். மேலும், தொட்டி பாலத்தை சீரமைக்கலாம். தண்ணீர் விடுகிறபொழுது ஒரு 75% தண்ணீர் புது பாலத்தி-லும், ஒரு 25% தண்ணீர் தொட்டி பாலம் வழியா-கவும் செல்கின்ற வகை-யில் ஒருதிட்டத்தை உரு-வாக்கலாம் என்ற கருத்தை எங்கள் சார்-பாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நீர்வ-ளத்துறை அதிகாரிக-ளுக்கு தெரிவித்து உள்-ளதாகவும்,

அவர்கள் அதை ஆய்வு செய்து அது குறித்து அறிக்கை கொடுக்க நட-வடிக்கை எடுக்க உள்-ளார்கள். புது பாலம் அமைக்க தொட்டிபா-லத்திற்கு அருகில் தனி-யாருக்கு சொந்தமான நிலம் சிறிய அளவில் தேவைப்படுகிறது.

அந்த நில உரிமையா-ளரை நாங்கள் 12.03.2026 அன்று நேரில் சந்தித்து மேற்கண்ட பயன்பாட்-டிற்கு நிலத்தை கொடுக்க பரிசீலிக்க வேண்டு-மென்று வேண்டுகோள் வைத்துள்ளோம்.

எனவே, தொட்டிபா-லத்தை சீரமைக்கவும், பாதுகாத்திடவும்,பொது-மக்கள் அதை சென்று பார்வையிடவும் தேவை-யான அனைத்து வசதிக-ளையும் ஏற்படுத்துகின்ற வகையில் அத்திட்டத்தை செயல்படுத்த அரசு அதி-காரிகளின் ஆய்வறிக்-கையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்ப-டும் என்பதை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மது-விலக்கு

ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்-துள்ளார்

### அகில இந்திய அளவில் 18வது இடமும் தமிழ்நாட்டில் 3 வது இடமும் பிடித்து

# UPSC சிவில் சர்வீஸ் தேர்வில் சாதனை புரிந்த கோவை மாணவி ஸ்ருதிக்கு பொதுமக்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் சார்பில் பாராட்டு



யு பி எஸ் சி சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி பெற்றதில் தனக்கு மட்டும் இன்றி பெற்றோர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருக்கு இதில் பங்கு உண்டு என யு பி எஸ் சி சிவில் சர்வீஸ் தேர்வில் அகில இந்திய அளவில் 18வது இடமும் தமிழ்நாட்டில் 3 வது இடமும் பிடித்து சாதனை புரிந்த கோவை மாணவி ஸ்ருதிக்கு பொதுமக்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழா தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டு நடைபெற்ற UPSC சிவில் சர்வீஸ் தேர்வில் அகில இந்திய அளவில் 18வது இடம் பெற்று கோயம்புத்தூரைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரி ஸ்ருதி சாதனை புரிந்துள்ளார்.

ஸ்ருதி கோயம்புத்தூரில் உள்ள ஹிந்துஸ்தான் இன்ஜினியரிங் மற்றும் டெக்னாலஜி கல்லூரியில் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் படித்துள்ளார். கல்வியை மதிக்கும் குடும்பத்தில் வளர்ந்த அவர், தனது கல்லூரி காலத்திலேயே சிவில் சர்வீசில் சேர வேண்டும் என்ற இலக்கை வைத்திருந்தார். அவரது தந்தை ஒரு தனியார் கல்லூரியில் முதல்வராக பணியாற்றுகிறார், தாய் இல்லத்தரசியாக உள்ளார்.

பொறியியல் படிப்பு முடிந்த பிறகு சில காலம் வேலை செய்த ஸ்ருதி, பின்னர்அந்தவேலையை விட்டு முழுமையாக UPSC தேர்வுக்குத் தயாராக முடிவு செய்தார். முதல் இரண்டு முயற்சிகளில் முன்னிலைத் தேர்வை தாண்ட முடியாதபோதும்,மனம்தளராமல் தொடர்ந்து படிப்பை மேற்கொண்டார்.

மூன்றாவது முயற்சியில் அவர் முதன்முறையாக முன்னிலைத் தேர்வைத் தாண்டி, அதன் பின்னர் மெயின்ஸ் தேர்விலும் சிறப்பாக செயல்பட்டு இண்டர்வியூ நிலையை அடைந்தார். தொடர்ந்து செய்த உழைப்பின் பலனாக இறுதிப்பட்டியலில் அகில இந்திய அளவில் 18 வது இடம் பெற்று வெற்றி பெற்றார்.

அவருக்கு கோவையில் பொதுமக்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

இதில் அவர் பயின்ற பள்ளி மற்றும் கல்லூரி, உறவினர்கள், நண்பர்கள் என பலரும் வந்திருந்து வாழ்த்தினர்.

தொடர்ந்து பேசிய ஸ்ருதி தயாரிப்பு காலத்தில் அவர் டெல்லியில் பயிற்சி மையத்தில் அடிப்படை பயிற்சி பெற்றதாகவும் பின்னர் கோயம்புத்தூரில் இருந்து சுயமாக படிப்பைத் தொடர்ந்து, தமிழக அரசின் "நான் முதல்வன்" திட்டத்தின் உதவியுடன் மெயின்ஸ் மற்றும் இண்டர்வியூ தயாரிப்பை மேற்கொண்டதாக தெரிவித்தார்.

மேலும் மெயின்ஸ் தேர்வில் வெற்றி பெற முந்தைய ஆண்டுகளின் கேள்வித்தாள்களை ஆய்வு செய்தல் மற்றும் குறுகிய குறிப்புகள் தயாரித்தல் ஆகியவற்றை அவர் முக்கியமாக பின்பற்றியதாக கூறினார். இந்த வெற்றி தனக்கு மட்டும் இன்றி பெற்றோர்,உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருக்கு இதில் பங்கு உண்டு என்று தெரிவித்தார்.

UPSC தேர்வில் வெற்றி பெற விரும்பும் மாணவர்கள் தொடர்ந்து முயற்சி செய்து, படித்ததை அடிக்கடி மறுபார்வை செய்ய வேண்டும் என்றும் சரியான மனப்பாங்கு மிகவும் முக்கியம்என்றும்ஸ்ருதி அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ந்த முயற்சி மற்றும் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் UPSC போன்றகடினமான தேர்விலும் வெற்றி பெற முடியும் என்பதை கோவை மாணவி ஸ்ருதி ஆர் நிரூபித்து உள்ளார்.




தமிழ்நாடு சட்டமன்றபொதுத் தேர்தல் வருகின்ற (23.04.2026) அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (16.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் அனைத்து கட்சி பிரதிநிகளுக்கான தேர்தல் நடத்தை நெறிமுறைகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சன்சௌத்ரி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு சட்டமன்றபொதுத் தேர்தல் வருகின்ற (23.04.2026) அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக (புதிய கட்டிடம்) முதல்தளத்தில் நேற்று (16.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர்ச.கந்தசாமிஊடகசான்றளிப்புமற்றும்கண்காணிப்புக்குழுமையத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார், உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) செ.கலைமாமணி உட்பட பலர் உள்ளனர்.



2026 சட்டமன்றத் தேர்தல் தேதி வரும் ஏப்ரல் 23ஆம் தேதி தமிழகத்தில் நடைபெற உள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்த நிலையில், தேர்தல் விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.இதன் ஒரு பகுதியாக, ஈரோடு மாவட்டம் பவானியில் உள்ள பவானி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலகத்தை தேர்தல் நடத்தும் அலுவலர் தலைமையிலான குழுவினர் பூட்டி சீல் வைத்தனர்.

# கிருஷ்ணகிரி முதல் திருவண்ணாமலை வரை இயக்கும் தனியார் பேருந்துகளின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களின் பரிதாப நிலை



கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி பேருந்து நிலையத்திலிருந்து அரசு பேருந்துகள் சேலம்உட் கோட்டத்தில்இயங்கும் அரசு பேருந்துகள் அனைத்தும் முறையான வழித்தடத்தில் இயக்காமல் சிறப்பு பேருந்து என்று திருவண்ணாமலைக்கு படையெடுத்து சென்று வருகின்றனர் இதனால் கிருஷ்ணகிரி முதல் திருவண்ணாமலை வரை இயக்கும்அனைத்துதனியார்பேருந்துகளும்மிகவும் அவதிக்கு உள்ளாகிறது இதனால் அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்களின் குடும்ப நலனை காக்க முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர் தமிழ்நாட்டிற்கு என்று பலதிட்டங்களைதமிழகஅரசு அறிவித்த நிலையில் தனியார் பேருந்து ஓட்டுநர் நடத்துனர்களின் வாழ்வாதாரத்தை குறி வைப்பது ஏன் சேலம் உட்கோட்ட அரசு பேருந்து களுக்கு மட்டும்விதிவிலக்காசேலம்உட்கோட்ட பேருந்துகள் அனைத்தும் திருவண்ணாமலைக்கே இயக்கப்படுகிறது இது தனியார் பேருந்து ஓட்டுனர் நடத்துனர்கள் இடையே ஒரு கேள்விக்குறி அரசு பேருந்து ஓட்டுநர் நடத்தினார்கள் தங்களின் காலநேர அட்டவணை முடிப்பதற்காக திருவண்ணாமலைக்கு சென்று வருகின்றனர் பகல் நேரத்தில் நிமிடத்திற்கு ஒரு சேலம் உட்கோட்டை பணிமனையில் அரசு பேருந்து இயக்குகின்றனர் இரவு நேரத்தில் ஒரு மணி நேரம் பொதுமக்கள் காத்திருந்தாலும் பேருந்து இயக்குவது இல்லை இதனால் தனியார் பேருந்துகளின் வாழ்வாதாரத்தை நசுக்கும் நோக்கில் இவர்கள் செயல்படுகிறார்கள் என்பது கேள்விக்குறி ஏற்கனவேஅரசியல்போக்குவரத்துதுறைநஷ்டத்தில் இயங்கும் போது போக்குவரத்து பொதுமக்களுக்கு தேவையாஎன்பது இவர்களின் கேள்விக்குறி மேலும் இதற்கு பதிலாக அரசு மருத்துவமனை மற்றும் இளைஞர்களின் நலன் காக்க கல்வித் திறனுக்காக பள்ளிகள் திறக்கப்பட்டால் இளைஞர்களின் கல்விதிறன்அதிகப்படும்எனவேஅரசுபோக்குவரத்து துறை இதைகண்காணிக்கப்பட வேண்டும் மேலும் இதே நிலை நீடித்தால் வட்டாரப் போக்குவரத்து அலுவலரிடமும் மாவட்ட ஆட்சி தலைவர் இடமும் தனியார் பேருந்து ஓட்டுநர் நடத்துனர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை காக்கவேண்டும் என்று புகார் மனு அளிக்க உள்ளதாக தெரிவித்து வருகின்றனர்

### கோவை நீலாம்பூர் பகுதியில் அமைந்துள்ள ராயல் கேர் மருத்துவமனையில்

# இண்டர்வென்ஷனல் கதிர்வீச்சியல் துறையில், அதிநவீன செயல் திறன் கொண்ட புதிய பிலிப்ஸ் அசுரியன் த்ரி. பாயிண்ட் ஓ பிளேன் கேத் லேப் துவக்கம்




நாட்டில் முதல் முறையாக உயர்நிலை தொழில்நுட்ப இயந்திரமான இன்டர்வென்ஷனல் கதிர்வீச்சியல் துறையில், அதிநவீன செயல் திறன் கொண்ட புதிய, பிலிப்ஸ் அசுரியன் 3.0 பை, பிளேன் கேத் லேப் துவங்கப்பட்டுள்ளது இதனை ராயல் கேர் மருத்துவமனையின் தலைவரும் நிர்வாக இயக்குனருமானடாக்டர்மாதேஸ்வரன் முன்னிலையில், கோவை மாவட்ட வருமான வரி முதன்மை ஆணையர் அருண் சி பாரத், ரிப்பன் வெட்டி துவங்கி வைத்தார். தொடர்ந்து இம்மையத்தின் செயல்பாடுகள், இப்புதிய கருவியின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியின் வாயிலாக, கலந்து கொண்ட அனைவரது மத்தியிலும் இக்கருவி குறித்து மருத்துவர் மாதேஸ்வரன் கூறியதாவது..

தற்பொழுது நிறுவப்பட்டுள்ள இக்கருவி மருத்துவப் பணியாளர்,மற்றும்நோயாளிகளின் மீதான கதிர்வீச்சு பாதிப்பை 50 சதவிகிதம் குறைகிறது எனவும்,துல்லியமான, மற்றும் தெளிவான உயர்தர படங்களை வழங்குகிறது எனவும், தீவிரசிகிச்சைநோயாளிகளை சிடி ஸ்கேன் அறைக்கு மாற்ற வேண்டியதை தவிர்க்கிறது எனவும்,அறுவை சிகிச்சைக்கு முன்பாக நேரடியாக ஸ்கேனை எக்ஸ்ரே கருவியுடன் இணைத்து, முப்பரிமான படத்தை வழங்குகின்றது, இந்த படத்தின் வழிகாட்டுதல்,துல்லியமாகஅதிகரிப்பதோடு மருத்துவர்களுக்கான தெளிவையும்வழங்குகின்றது என தெரிவித்தார். மனிதனின் கண்களைவிட,39சதவிகிதம் துள்ளியமாக, புற்று நோய்க்கு செல்லும் ரத்தநாளத்தை தானாக கண்டறிகின்றது எனவும், மேம்படுத்தப்பட்ட முறையில் நரம்புகளை அறிதல், பக்கவாதம், மூளை ரத்தநாள வீக்கம், போன்ற சிகிச்சைகளு க்கு உதவுகின்றதாக தெரிவித்தார். சிறுநீரக பாதிப்பு, சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு கால் வழியாக செலுத்தப்படும் செறிவூட்டல் மருந்தின் அளவை இக்கருவி குறைக்கிறது எனவும், ரத்தநாளங்களில் உள்புறமும், வெளிப்புறமும், பைபர் ஆப்டிக் முறையில், காண நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வசதியை கொண்டுள்ளதாக தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவமனையைச் சார்ந்த பல்வேறு துறை மருத்துவர்கள், ஊழியர்கள், தொழிலதிபர்கள், மற்றும் பொதுமக்கள்,என பலரும்கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் ஒன்றிய NDA அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடியில்ஒன்றிய பாஜக அரசின் அலட்சியத்தால் ஏற்பட்ட கேஸ் சிலிண்டா எரிவாயு உருளை கிடைக்காததையும் தமிழகத்திற்கு நிதி ஒதுக்காததையும் கண்டித்து சிதம்பரநகா பேருந்துநிறுத்தம்அருகில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சாா்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிா் உாிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தலைமையில் மேயர் ஜெகன் பெரியசாமி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் காங்கிரஸ் ஏபிசி.சண்முகம், சகாயராஜ், முரளிதரன், விடுதலை சிறுத்தை விமல் வங்காளியாா், விஜி, தமிழக வாழ்வுரிமை கட்சி கிதர் பிஸ்மி, மதிமுக நக்கீரன் முருகபூபதி, திராவிடர் கழகம் முனியசாமி, பால்ராஜேந்திரன், சிபிஐ கரும்பன், தனலட்சுமி, சிபிஎம் ஆறுமுகம் முத்து, அர்ஜீனன், சமத்துவமக்கள் கழகம் அற்புதராஜ், இ.யூ.முஸ்லிம் லீக் மீராசா ம.நீ.ம. ஜவஹர், அக்பா், ஆதிதமிழா் பேரவை முத்துக்குமாா், ஆதி தமிழா் கட்சி ஊர்காவலன், மனித நேய மக்கள் கட்சி யூசுப், ஆஷாத், தமிழா் திராவிடா் கட்சி ஹேமா, மனித நேய ஜனநாயக கட்சி முகமதுஅசன், எஸ்டிபிஐ ஷேக்அஷ்ரப் அலி, ஆம் ஆத்மி கட்சி குணசீலன், மூக்குலத்தோா் புலி படை மணி, தமிழ்புலிகள் முனியம்மாள், தேமுதிக தயாலிங்கம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன் வரவேற்புரையாற்றினாா்

பின்னர் ஆர்ப்பாட்டத்தில்அமைச்சர்கீதாஜீவன் பேசுகையில்: என்டிஏ அரசுக்கும் தமிழகத்திற்கும் நடைபெறுகின்ற தோ்தல் நேரத்தில் இந்த ஆா்ப்பாட்டம் முக்கியமானதாகும். தமிழகத்தை ஏற்கணவே ஒன்றிய அரசு கல்வி நிதி 100 நாள் வேலைதிட்ட நிதி ஜல்ஜீவன் நீா்நிலை நிதி என பலவற்றையும் தொடா்ந்து புறக்கணித்த நிலையில் கேஸ்க்கு மாணியம் வழங்குகிறோம் என்று கூறிவிட்டு 60ரூபாய் விலைஉயா்வை செய்து விட்டு இப்போது கேஸ் சிலிண்டா் கிடையாது என்கிறாா்கள். சென்னையில் இருக்கின்ற பலா் என்னைதொலைபேசியில் தொடா்பு கொண்டு தூத்துக்குடியிலிருந்து அடுப்பு வாங்கி அனுப்புங்கள் என்கிறாா்கள். இந்த நிலையை உருவாக்கிய ஒன்றிய அரசுக்கு பாடம் புகட்ட வேண்டும் வெளியுறவு கொள்கையில் ரஷ்யாவோடு ஒப்பந்தம் போடப்பட்ட காலத்தில் எல்லாம் நல்லப்படியாக நடந்தது. அமொிக்காவிடம் ஒப்பந்தம் போடப்பட்ட பின் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பாிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தோ்தல் நேரத்தில் கூட தமிழகத்திற்கு எந்தநிதியும் ஒதுக்கவில்லை. அடிமை அதிமுக எடப்பாடி பழனிச்சாமிக்கும் தமிழகத்தை தொடா்ந்து புறக்கணிக்கும் பிஜேபி அரசுக்கும் தோ்தலில் தக்க பாடம் புகட்டவேண்டும் மதசாா்பற்ற கூட்டணி 234 தொகுதிகளிலும் வெற்றிபெறவேண்டும். அதற்கு அனைவரும் சூளுரையேற்று பணியாற்றவேண்டும்என்று பேசினாா்.



ஆர்ப்பாட்டத்தில் வடக்கு, மாவட்ட அவைத்தலைவர்செல்வராஜ், துணைச் செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம், பொருளாளர் ரவீந்திரன், மாநில நிர்வாகிகள் புளோரன்ஸ், அன்பழகன், துணை மேயர் ஜெனிட்டா, மாநகர திமுக துணைச்செயலாளர்கள் கீதாமுருகேசன், கனகராஜ், பிரமிளா மண்டலத்தலைவா்கள் வக்கீல் பாலகுருசுவாமி, நிா்மல்ராஜ், கலைச்செல்வி, அன்னலட்சுமி, பகுதி செயலாளர்கள் சுரேஷ்குமாா், ரவீந்திரன், ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், மாவட்ட அணி நிர்வாகிகள் மதியழகன், கவிதா தேவி, அபிராமி நாதன், அந்தோணி ஸ்டாலின், அந்தோணிகண்ணன், அருணாதேவி, ஜேசையா, அருண்குமாா், மாநகர அணி நிர்வாகிகள் ஜீவன்ஜேக்கப், அருண்சுந்தர், சாரதி, ஆனந்தசேகா், ரூபஸ்அமிா்தராஜ் கிறிஸ்டோபர் விஜயராஜ், ஜெயக்கனி, ரூபராஜா, பால்ராஜ், மகேஸ்வரன்சிங், நைஸ்பரமசிவம், சத்யா, செந்தில்குமாா், பொதுக்குழு உறுப்பினர்கள் கோட்டுராஜா, கஸ்தூரி தங்கம், இராஜா, மாவட்ட பிரதிநிதிகள் நாராயணன், சோமபாண்டியன், ராஜ்குமாா், சுரேஷ், வட்டச்செயலாளர்கள் சுப்பையா, சிங்கராஜ், சுரேஷ், செல்வராஜ், ரவீந்திரன், முனியசாமி, செந்தில்குமாா், மணோ, டென்சிங், கதிரேசன், லியோஜான்சன், கருப்பசாமி, சேகா், சந்தனமாாிமுத்து, ரவிசந்திரன் கவுன்சிலா்கள் சரவணக்குமாா், இசக்கிராஜா, பொன்னப்பன். வைதேகி, சுப்புலட்சுமி, பவாணி, ஜான்சிராணி, கண்ணன், ராமா், ஜெயசீலி, தெய்வேந்திரன், கந்தசாமி, பெருமாள் கோவில் அறங்காவலா் குழு தலைவர் செந்தில்குமாா், பல்வேறு கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் சரவணப்பெருமாள், ராஜன், பிரபாகா், நிா்மல்கிறிஸ்டோபா், முன்னாள் கவுன்சிலா்கள் ஜெயசிங், பொியசாமி, இசக்கிமுத்து, மற்றும் மணி, பிரபாகா், ஜேஸ்பா், ஜாக்சன், அருணகிாி, உள்பட திமுக மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோயம்புத்தூர் காட்டன் சிட்டி ரோட்டரி சங்கத்தின் "நெக்டர் ஆஃப் லைஃப்" மனித பால் வங்கி சாதனை விழா மற்றும் கொடையாளர்களுக்கு பாராட்டு விழா

ரோட்டரி மாவட்டம் 3206-ன் கீழ் செயல்படும் கோயம்புத்தூர் ரோட்டரி கிளப் ஆப் காட்டன் சிட்டி தனது சேவை திட்டமான "நெக்டர் ஆ:ப் லை:ப்" மனித பால் வங்கித் திட்-



டத்தின் மூலம் 25 லட்சம் மி.லி. தாய்ப்பால் சேகரிப்பு என்ற மிகப்பெரிய மைல்கல்லை எட்டியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இதற்காகப் பாடுபட்ட கொடையாளர் தாய்கள் மற்றும் "நெக்டர் பீஸ்" தன்னார்வலர்களைக் கௌரவிக்கும் விழா கோயம்புத்தூர் ஆர்.எஸ். புரம், ராஜஸ்தான் நிவாஸில் நடைபெற்றது..

கோயம்புத்தூர் ரோட்டரி கிளப் ஆப் காட்டன் சிட்டி தலைவர் தருண் குமார் ரான்கா மற்றும் செயலாளர் பாயல் சோர்டியா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற விழாவில், சிறப்பு விருந்தினர்களாக, கோவை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன் மற்றும் உடற்பயிற்சி மற்றும் அதிகாரமளித்தல் பயிற்சியாளர் டாக்டர் ஜெயா மகேஷ் ஆகியோர் பங்கேற்றனர்.. நிகழ்ச்சியில் கௌரவ விருந்தினர்களாக வுமன்ஸ் சென்டர் பை மதர்ஹூட் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் மிருதுபாஷினி கோவிந்தராஜன், எஸ்.என்.ஆர் அண்ட் .சன்ஸ் நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன்,ராஜஸ்தான் சங்கம் தலைவர் சந்தோஷ் குமார் முந்த்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்...

விழாவில் தாய்ப்பால் கொடை வழங்கிய தாய்மார்கள் மற்றும் நெக்டர் பீஸ் சேவையாளர்களுக்கு பாராட்டு தெரிவித்து நினைவு பரிசு வழங்கி கவுரவிக்கப்பட்டது

நெக்டர் ஆ:ப் லை:ப்" திட்டத்தின் தலைவர் ராகேஷ்ரான்கா,இணைத் தலைவர் அர்ச்சனா குமார், மற்றும் சமூகச் சேவை இயக்குநர் ராபின் பாபெல் ஆகியோர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாவட்ட இயக்குநர் சம்பத் குமார்,உதவி ஆளுநர் கோபாலகிருஷ்ணன் மற்றும் ஆளுநரின் குழுப் பிரதிநிதி அருள் உட்பட ரோட்டரி நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## கோவை மாவட்டம் பேரூர் பகுதியில், மள்ளரியப் பேராசான் என்றழைக்கபடும் டாக்டர் குருசாமி சித்தரின் இரண்டாம் ஆண்டு புகழஞ்சலி

### திரலானோர் கலந்து கொண்டு அவரது திருவுருவச் படத்திற்கு மரியாதை செலுத்தினர்



கோவையில் பிறந்து வளர்ந்த,தமிழ் அறிஞர்களில் ஒருவர் குரு சாமி சித்தர். தேவ நேய பாவாணரை குருவாக கொண்ட இவர், சேரசோழபாண்டியர்களின் வரலாறு, நீர் மேலாண்மை, சங்க இலக்கியம், மற்றும் மருத பாடல்கள் குறித்து பல்வேறு ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். இவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் வயது மூப்பு காரணமாக உயிழந்தார். மள்ளரியப் பேராசான் என்றழைக்கப் படும் டாக்டர் குருசாமி சித்தரின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி கோவை பேரூர் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு இந்திரன் இதழ் ஆசிரியர் உலகநாதன் தலைமை தாங்கினார். ராஜு தேவேந்திர சுவாமிகள் இந்திராஞ்சலி செலுத்தினர்., அன்னபூரணி குருசாமி சித்தர் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து அனைத்து பொதுமக்களும் இணைந்து டாக்டர் குருசாமி சித்தர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து குருசாமி சித்தர் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவரது நினைவு களை எடுத்து கூறினர் வழக்கறிஞர் விஜயகுமார், ராஜு மணிமாறன், புலியகுளம் முருகராஜ்,பனாமாதங்கவேல், பட்டக்காரர் பிரபுகுமார், அவினாசி சேகர், செந்தூர் பாண்டி, தீப முனியப்பன், ஆசிரியர் ஆறுமுகம், பார்த்திபன் பூவை, குனியமுத்தூர் ராமதாஸ், மற்றும் பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை சிறுவாணி சாலை காளம்பாளையம் பகுதியில், ஜி.எஸ் டியூசன் சென்டர் நிறுவனத்தின் புதிய கிளை, துவக்கவிழா நிகழ்ச்சி

## ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர் மைதிலி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்



கோவை மாவட்டம் சிறுவாணி சாலை காளம்பாளையம் பகுதியில், ஜி.எஸ் டியூசன் சென்டரின் புதிய கிளை துவங்கபட்டது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவி பேராசிரியர் முனைவர் மைதிலி, கலந்து கொண்டு இந்த புதிய கிளையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற விழாவில், ஜிஎஸ் டியூசன் சென்டர் நிறுவனத்தின் நிறுவனர் கணேஷ் முருகன்,அவர்களது தாய் சாந்தி கங்காதரன்,மற்றும் மூத்த ஆசிரியர் சுமன்ஜு ஆகியோர் இணைந்து சிறப்பு விருந்தினரை வரவேற்று மரியாதை செய்தனர். தொடர்ந்து மாணவர்கள் மத்தியில்பேசியதமிழ்த்துறை பேராசிரியர் மைதிலி கூறியதாவது.. மாணவர்கள் உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து கடினமாக உழைத்தால் வாழ்க்கையில் வெற்றி பெறமுடியும் என்பதையும், கல்வியின் முக்கியத்துவம் மற்றும் ஒழுக்கத்தின் அவசியம் பற்றியும் மாணவர்களுக்கு பயனுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கினார். ஜி. எஸ். டியூசன் சென்டர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவியர்கள், என பலரும் கலந்து கொண்டு, தங்களது அனுபவங்களையும் கருத்துகளையும் பகிர்ந்து கொண்டனர். ஜி.எஸ். டியூசன் சென்டர் நிறுவனர் கனேஷ் முருகன் தனது உரையில் கூறியதாவது.. ஜிஎஸ் டியூசன் சென்டர் கடந்த, 2021 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்போது ஐந்தாவது ஆண்டாகவெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது, தற்போது 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு கிளைகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

2026-2027 கல்வியாண்டிற்கான சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை சிபிஎஸ்இ, மெட்ரிகுலேஷன், மற்றும் ஸ்டேட் போர்ட் பாடத்திட்டங்களுக்கும், சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. காலை, மாலை மற்றும் வார இறுதி சிறப்பு வகுப்புகளும், வாராந்திர மற்றும் மாதாந்திர மதிப்பீடுகளும் இம்மையத்தில் நடைபெறுகின்றது என தெரிவித்தார்.தொடர்ச்சியாக மாணவர்களின் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன், மாணவ மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்று விழா நிறைவு பெற்றது.



ஈரோடு மாநகர மாவட்ட தமிழக வெற்றிக் கழக சூரம்பட்டி பகுதி அலுவலக திறப்பு விழா (மார்ச்.15) அன்று நடைபெற்றது. சூரம்பட்டி பகுதிச் செயலாளர் பழனிக்குமார் ஏற்பாட்டின் பேரில் புதிதாக திறக்கப்பட்ட இவ்வலுவலக திறப்பு விழா முடிந்ததும் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் தவெக ஈரோடு மாநகர மாவட்டச்செயலாளர் விஜய்பாலாஜி உட்பட கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, கோடை வெயிலை முன்னிட்டு

## கோவை சிவாஜி காலனி பகுதியில் இலவச நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு நீர் மோரை பருகினர்



கோடை கால வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் கோவையில் அதிகரித்து வருகின்ற நிலையில், கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இலவச நீர் போர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும்,வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் தலைமை தாங்கி இலவச நீர் மோரை பொதுமக்களுக்கு வழங்கினார். சுமார் ஆயிரகணக்கான பொதுமக்கள் நீர்மொரை பருகி சென்றனர்.மேலும் இது குறித்து வழக்கறிஞர் புஸ்பாணந்தம் கூறியதாவது..

கோடை வெயில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.பொது மக்கள் வெயிலை சமாளிக்கமுடியாமல்தவித்து வருகின்றனர். இதனை அறிந்து தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இலவச நீர் மோர் வழங்கும் விழாவை ஏற்பாடு செய்து, கோவை சிவாஜி காலனி பகுதியில் ஞாயிறுக்கிழமை காலை 11 மணி முதல் மதயம் 1மணி வரை நீர் மோர் வழங்கினோம் இதில் சுமார் ஆயிரக்கணக்கானோர் நீர் மோர் வாங்கி அருந்தி சென்றதாக கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் பெரிய குமாஸ்தா செல்வராஜ், ஜெபா, லட்சுமி, வைத்தியர் பாலகிருஷ்ணன், அமல்ராஜ், மோகன், வெங்கட், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில செயலாளர் சுந்தர், பைனான்ஸியர் பெருமாள், சிவாஜி காலனி குடியிருப்போர் நலச் சங்க தலைவர் லயன் டாக்டர் நடராஜன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டம் பவானியில் திமுக மகளிர் அணி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் தொகுதிப் பொறுப்பாளர் சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டப் பொறுப்பாளர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் கலந்து கொண்டார். வரும் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு மகளிர் அணியினர் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் பணிகள் மற்றும் களப்பணிகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

### கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள

## ஸ்ரீ இராமகிருஷ்ணா பல் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையின் 21வது பட்டமளிப்பு விழா



கோவை ஆவாரம்பாளையம்பகுதியில்உள்ள, ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் 21வது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. பட்டமளிப்பு அணிவகுப்புடன் தொடங்கிய இந்த நிகழ்ச்சியில் எஸ்.என். ஆர். சன்ஸ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர் .ஆர். சுந்தர், மணிப்பால் பல் மருத்துவக் கல்லூரி பேராசிரியர் டாக்டர் கோபாலகிருஷ்ணன். ஸ்ரீ ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் டாக்டர். ஸ்ரீஹரி மற்றும் கல்லூரியின் அனைத்து துறைத் தலைவர்களும் அரங்கினுள் மதிப்புடன் அழைத்து வரப்பட்டனர். அணிவகுப்புக்குப் பின், நிகழ்ச்சி இறைவணக்கப் பாடலுடன் இனிதே ஆரம்பமானது. பின்னர் எஸ்.என்.ஆர். அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் டாக்டர். ஆர். சுந்தர் அவர்கள் பட்டமளிப்பு விழாவை தொடங்கி வைத்தார். முதல்வர் டாக்டர் ஜா. ஸ்ரீஹரி அவர்கள் வருகை தந்த அனைவரையும் வரவேற்று, பட்டம் பெறும் மாணவர்கள் தங்களின் கல்வி அறிவை வளர்ச்சிக்கான அடிப்படையாக பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். நிர்வாக அறங்காவலர் டாக்டர். ஆர். சுந்தர் மாணவ மாணவியர்கள் மத்தியில் கூறியதாவது..பட்டபடிப்பின் முக்கிய நோக்கமே சமுதாயத்திற்கு சேவை செய்வதுதான் என்றார். நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினரான டாக்டர் கோபாலகிருஷ்ணன் பட்டமளிப்பு தின உரையை வழங்கி, மாணவர்களுக்கு ஊக்கமும் வழிகாட்டுதலும் அளித்தார்.

தொடர்ந்து 80 இளநிலை பட்டதாரிகளும்,12 முதுநிலை பட்டதாரிகளும் தங்களுடைய பட்டங்களைப் பெற்றனர். எல்லாத் துறைகளிலும் முதன்மை பெற்ற மாணவர்கள் பதக்கங்களோடு சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். டாக்டர் சிந்தூரா மூன்று தங்கப்பதக்கங்களைப் பெற்றதுடன் சிறந்த மாணவிக்கான தங்க பதக்கத்தையும் பெற்றார். மேலும் இரண்டு அறக்கட்டளை நிதியும் அவருக்கு வழங்கப்பட்டது. பின்னர் துணை முதல்வர் அவர்கள் பட்டம் பெறும் மாணவர்களை மருத்துவ உறுதிமொழி ஏற்க வைத்தார். அதன் பின்னர் பட்டமளிப்பு விழா நிறைவடைந்ததாக நிர்வாக அறங்காவலர் அறிவித்தார். நிகழ்ச்சி தேசிய கீதத்துடன் நிறைவடைந்தது.

## மக்களுக்கு இலவசங்கள் வேண்டாம் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வளர்ச்சிதான் வேண்டும்

### நாம் இந்தியர் கட்சி தலைவர் என்.பி.ராஜா பேச்சு

தமிழகத்தில்நடைபெறஇருக்கின்ற2026சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நாம் இந்தியர் கட்சியின் மாநில பொதுக்குழு கூட்டம் மற்றும் 2026 சட்டமன்றத் தேர்தல்முதல்கட்டதேர்தல்அறிக்கையைவெளியீட்டு நிகழ்ச்சி நேற்று தூத்துக்குடி போல்பேட்டையில் உள்ளதனியார்திருமணமண்டபத்தில்நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு அதன் மாநில தலைவர் என்.பி.



ராஜா தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில்,நாம் இந்தியர் கட்சியின் 2026 சட்டமன்ற தேர்தல் அறிக்கையை தலைவர் என்.பி.ராஜா வெளியிட்டார்.அதன் முதல் பிரதியை மாநில பொதுச் செயலாளர் பொன்ராஜ் பெற்று கொண்டார். அதனை தொடர்ந்து தலைவர் என்.பி.ராஜா பேசியதாவது: "நாம் இந்தியர் கட்சி தொடங்கிய பிறகு 2 சட்டமன்ற தேர்தல்களை சந்தித்துள்ளது. கடந்த சட்டமன்ற தேர்தலில் நாம் இந்தியர் கட்சியினர் 14 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்தனர். அதில் 4 வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. கட்சியில் இருந்து எந்த செலவும் செய்யப்படாத நிலையில், எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், 10 தொகுதிகளில் நமது வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். அவர்களை பாராட்டுகிறேன்.

இப்போது தேர்தல் அறிக்கைக்காக ஒரு கட்சி பெண்களுக்கு ரூபாய் 5,000 கொடுப்பதாக சொன்னால், இன்னொரு கட்சி ரூபாய் 10,000 தருவதாக சொல்கிறார்கள். இலவசங்களை அறிவிக்கும் கட்சிகள் வேலைவாய்ப்புகளை பற்றியெல்லாம் சொல்வதுகிடையாது.முதலில்மக்களுக்குபாதுகாப்பு என்பது ரொம்ப ரொம்ப முக்கியம்.அதற்கு பிறகுதான் அடிப்படை தேவைகள் எல்லாம். மக்கள் உழைப்பதற்கும், உழைப்புக்கேற்ற ஊதியம் பெற்று வாழ்வதற்குமான வாய்ப்புகளை வழங்குவதுதான் சிறந்த ஆட்சி பல கஷ்டங்களை அனுபவித்து படிப்படியாக நாம் இந்தியர் கட்சி வளர்ந்துள்ளது. தற்போது 20% வளர்ச்சியை அடைந்துள்ளோம். நிறைய வாக்காளர்கள் நம்பிக்கையோடு கட்சியில் சேர வேண்டுமானால் கொள்கை முக்கியம். நிரந்தர கொள்கையை நாங்கள் கடைப்பிடித்து பயணிப்பதால், இந்த முறை சட்டமன்றத்துக்கு செல்வோம். 2031ல் ஆட்சியை பிடிப்போம் என்று உறுதியாக சொல்ல முடியும். இந்த 2026 தேர்தலை பொறுத்தவரையில் குறைந்தது 100தொகுதியிலாவது போட்டியிடுவோம்". இவ்வாறு என்.பி.ராஜா தெரிவித்தார்.

கூட்டத்தில் மாநில பொருளாளர் பேரூரணி து ஜெயகணேஷ், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் சங்கரன், வடக்கு மாவட்ட செயலாளர் கருப்பசாமி, மாவட்ட துணை செயலாளர்கள் சின்னத்துரை, குட்டி, சேசு ராஜேந்திரன், மாவட்ட தொழில்நுட்ப அணி செயலாளர் சுந்தர், மாவட்ட இளைஞரணி செயலாளர் உடையார், வடக்கு மண்டலம் செயலாளர் சவுந்தரராஜன், அவை தலைவர் அமிர்தகாந்தன், நெல்லை மாவட்ட செயலாளர் ராமகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் பாலமுருகன், எட்பின், தனசங்கர், ஜெயக்குமார், தங்கதுரை, முருகன், அருண்குமார், கோயில் ராஜ், சிவலிங்கம் உள்ட பலர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விருப்பமனு நேர்காணல் நடைபெற்றது



தூத்துக்குடியில் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்தவர்களுக்கான நேர்காணல் தனியார் ஹோட்டலில் வைத்து மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் சகாயராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த நேர்காணலில் தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்திருந்த 15 பேர் கலந்து கொண்டனர். இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டேனியல்ராஜ், சுடலையாண்டி, பாராளுமன்ற தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் மகேந்திரன் ஆகியோர் ஆகியோர் நேர்காணல் நடத்தினர்.

நிகழ்ச்சியில் பிற்பட்டோர் பிரிவு ஒருங்கிணைப்பாளர் ஜெயக்கொடி, மாநகர் மாவட்ட பொதுச்செயலாளர் செ.மைக்கில் பிரபாகர், மண்டல தலைவர்கள் சேகர், ஐசன் சில்வா, மாநகர் மகளிர் காங்கிரஸ் தலைவி பிரீத்தி, மகளிர் அணி அமைப்பாளர் முத்துவிஜயா, வடக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பெத்துராஜ், ராஜாராம், மற்றும் ப்ரீத்தி வினோத், பாலசுப்ரமணியன், தனுஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.